# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## CC. No.1419/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | மீனாள் | க-பெ | சிதம்பரம் |
| ஊர்: | : | அமராவதி புதுார் | | |
| வயது: | : | 60/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | கட்டிட வேலை | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.08.2026

**எதிரி ஆஜர் இல்லை மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

-----------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் அமராவதி புதுாரில் வசித்து கட்டிட வேலை செய்து வருகிறேன். வழக்கின் எதிரியை தெரியும். எனது மகன் பழனிவேலின் வெள்ளை நிற Scooty இருசக்கர வாகனம் வெளியில் உள்ள அலுவலகத்தில் இரவு 9.00 மணியளவில் சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நிறுத்தப்பட்டிருந்தது. என்ன பிரச்சனை நடந்தது என்று தெரியாது. ஆனால் இருசக்கர வாகனத்தை பொட்டு குமார் என்பவர் அங்கு வந்து வாகனத்தை கம்பியை கொண்டு உடைத்தார். அப்போது அவரிடம் ஏன்டா உடைக்கிறாய் என்று நான் கேட்டேன். அவர் என்னை கம்பியை கொண்டு உச்சந்தலை, மற்றும் நெற்றி, மார்பு ஆகிய இடங்களில் தாக்கினார், வயிற்றில் எற்றி உதைத்தார். சம்பவ சமயத்தில் என்னை அவர் என்னை அவர் என் மகளை கூட்டி விடுகிறாய் என்றும் என் மகன் ஒரு ரௌடி என்றும் சொன்னார். அந்த சமயத்தில் நான் மயக்கம் போட்டு கீழே விழுந்த போது 108 ஆம்புலன்ஸ் வந்து என்னை தேவக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் அவர்களிடம் மேற்படி விவரங்களை நான் சொன்னேன். அவர்களிடம் நான் புகார் வாக்குமூலம் அளித்தேன் அந்த **புகார் வாக்குமூலம் அ.ச.ஆ.1**.

**குறுக்கு விசாரணை**

புகார் வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாத. அது யார் எழுதியது என்றால் தெரியாது. எங்கு வைத்து என்னை விசாரணை செய்தார்கள் என்றால் மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்தார்கள். சம்பவத்திற்கு மறு நாள் தான் நான் மருத்துவமனைக்கு சேர்ந்தேன் என்றால் சரியல்ல. அன்றைய தினமே மருத்துவமனைக்கு சென்று விட்டேன். மருத்துவமனையில் இருந்து யாரிடம் சொல்லாமல் நானாக

வெளியேறிவிட்டேன் என்றால் சரியல்ல. எனது மகன் வண்டி நிறுத்திய இடத்தில் தான் முத்துக்குமார் என்பவர் ஆட்டோவை நிறுத்துவார் என்றால் சரியல்ல. எனது மகனின் இருசக்கர வாகனம் பழைய வாகனம் என்றால் சரிதான். அவர் வேலை செய்யும் பெட்ரோல் பங்கில் கொடுத்தது. என்னையும் இருசக்கர வாகனத்தையும் கம்பால் வைத்து தாக்கியதாக சொன்னால் தவறு என்றால் சரிதான். முத்துக்குமாருக்கும் எனது மகனுக்கும் முன் விரோதம் உள்ளது என்றால் சரிதான். சேதமான வண்டியை யார் சரி செய்தார்கள் என்றால் சரி செய்யவில்லை. புகாரில் என்னனென்ன உடைந்தது என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன். வண்டியின் சேதாரம் எனது மகன் எடுத்து கொண்டு சென்று அவரை ஏற்படுத்திக்கொண்டது என்றால் சரியல்ல. சேதாரத்தை சரி செய்வதற்காக எதிரி மீது பொய்யாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வண்டியின் உரிமையாளர் யார் என்று தெரியுமா என்றால் தெரியும் பெட்ரோல் பங்கின் உரிமையாளர் விற்பனை செய்துவிட்டார். சம்பவத்தில் எனது மகனும் எதிரியை தாக்கி எதிரி என் மீதும் எனது மகன் மீதும் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அதை இருவரையும் வைத்து இனிமேல் பிரச்சனை செய்யக்கூடாது என எழுதி வாங்கினார்கள். என்னை தாக்கியாக சொல்லப்படும் கம்பியின் அடையாளம் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் மயக்கம் போட்டு கீழே விழுந்த விவரத்தையும் போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை நான் எனது மகனுக்கு ஆதரவாக புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.08.07 11:29:17 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.